මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය :011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
General Office
ෆැක්ස්/தொலைநகல்/Fax:011-2868426
*Web: www.elections.gov.lk e-mail: info@slelections.gov.lk*

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත,රාජගිරිය(10107)
தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய*(10107)*


| | | |
|---|---|---|
| මගේ අංකය : EC/EDR/PE/2024/21<br>எனது இல. : | ඔබේ අංකය :<br>உமது இல.: | දිනය : 2024.10.03<br>திகதி : |

போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகளினதும் செயலாளர்கள் / அதிகாரம்பெற்ற முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள்,

**பராளுமன்றத் தேர்தல் - 2024**
**தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது பின்பற்றியொழுக வேண்டிய நடைமுறைகள்**

2024.11.14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின் பிரச்சார நடவடிக்கைகளை மட்டுப்படுத்தல் தொடர்பில் பின்வரும் நியதிகள் தேர்தல் ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்றன.

1. பொது இடங்களில் வேட்பாளர் ஊக்குவிப்புக்கான அறிவித்தல்கள், பிரச்சார பலகைகள், போஸ்டர், கடவுட், கொடிகள், பதாகைகள், பெனர், தோரணங்கள், சித்திரங்கள், புகைப்படங்கள், தேர்தல் சின்னங்கள் / வேட்பாளர் பெயர்கள், வழக்கமான பிரயோகங்கள் என்பவற்றை காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதோடு, வேட்பாளர்களை / கட்சிகளை ஊக்குவிப்பதற்கான டீசேர்ட்கள் மற்றும் தொப்பிகளும் தடைசெய்யப்பட்டுள்ளன. எந்த சந்தர்ப்பத்திலும் தேசியக் கொடி, சமயக் கொடிகள் மற்றும் சமயச் சின்னங்களை காட்சிப்படுத்தல் கூடாது.
2. பொது மக்களுக்கு தொந்தரவு ஏற்படாத வகையில் அதிகபட்சமாக 05 பேரைக் கொண்ட குழுவினருடன் வீட்டுக்கு வீடு சென்று மாத்திரம் துண்டுப் பிரசுரங்களை வழங்க முடியும். அவ்வாறே அந்த துண்டுப் பிரசுரங்களை பகிரந்தளிக்க முடியுமெனிலும் காட்சிப்படுத்த முடியாது. எல்லா சந்தர்ப்பங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்ட வெளியீட்டு நிறுவனம், அச்சகத்தின் முகவரி மற்றும் விபரங்கள் அச்சிடப்பட்டிருக்க வேண்டியது கட்டாயமானதாகும்.
3. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவாக கூட்டத்தின் போது அந்தக் கூட்டம் நடைபெறுவதற்கு (07) நாட்களுக்கு முன்னர் அந்தக் கூட்டங்கள் நடைபெறும் இடங்கள், திகதி, நேரம் மற்றும் பேச்சாளர்களின் பெயர்கள் மற்றும் வேட்பாளர்களின் பெயர்கள் போன்ற விபரங்களை மாத்திரம் உள்ளடக்கிய போஸ்டரினை ஏற்புடைய மாவட்டத்தின் எல்லையில் மாத்திரம் காட்சிப்படுத்துவதற்கு அனுமதியுண்டு.
4. கூட்டம் நடைபெறும் தினத்தில் அந்தக் கூட்டம் நடைபெறும் பூமியில் மாத்திரம் சட்டரீதியாக தயாரிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள், அறிவித்தல்கள், சித்திரங்கள் மற்றும் புகைப்படங்கள் போன்றவற்றை காட்சிப்படுத்த முடியும். கூட்டம் நடாத்தும் அந்த இடத்தை மாத்திரம் அலங்கரிக்க முடியும். அவ்வாறே திறந்த வெளியொன்றில் கூட்டம் நடைப்பெறும் போது அந்த இடத்தை சூழ மாத்திரம் அலங்கரிக்க முடியும். கூட்டமொன்று நடைப்பெறும் போது அப்பிரதேசத்தின் சந்தி சுற்றுவட்டத்தைச் சூழ கொடிகள், பெனர்கள் மற்றும் பிரச்சாரப் பதாகைகளை காட்சிப்படுத்தல் கூடாது. அவ்வாறே ஒலிபெருக்கி இயந்திரங்களை கூட்டம் நடைபெறும் பூமியில் மாத்திரம் பயன்படுத்தல் வேண்டுமென்பதோடு, அந்த இயந்திரங்களை வெளிபுறத்தை நோக்கி பொருத்துதல் கூடாது.
5. மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்ட வேட்பாளரின் வாகனத்தில் மாத்திரம் வேட்பாளரின் பிரச்சார போஸ்டரினைக் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்படுவதோடு, வேட்பாளர் பயணிக்காத வாகனமொன்றில் தேர்தல் தொடர்பான துண்டுபிரசுரங்கள் காட்சித் தாள்கள், அறிவித்தல் தாள்கள், சித்திரங்கள், வேட்பாளரின் புகைப்படங்கள், சின்னங்கள் அல்லது குறியீடுகளை காட்சிப்படுத்த முடியாது. ஒரு வேட்பாளரை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும் வாகனத்தில் அல்லது ஒரு கொடி அல்லது பதாகையொன்றை காட்சிப்படுத்தலாம். வேட்பாளரை ஏற்றிச் செல்லும் அதிக எண்ணிக்கையிலான வாகனங்களில் இதுபோன்ற கொடிகள் அல்லது பதாகைகளை காட்சிப்படுத்துவது குற்றமாகும். எனவே, ஒரு வேட்பாளர் பயணம் செய்யும் போது, அந்த வாகனத்தில் மட்டுமே கொடியை வைப்பதற்க சட்ட ரீதியாக அனுமதித்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். பொதுமக்களின் போக்குவருத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரதம், இலங்கை போக்குவருத்துச் சபையின் பஸ் வண்டிகள் அல்லது தனியார் பஸ் வண்டிகளில் அல்லது வேறு தனியார் வாகனங்களில் இவ்வாறானவற்றை காட்சிப்படுத்த முடியாது.
6. பிரச்சார நடவடிக்கையின் போது வாகனப் பேரணிகளை நடாத்த முடியாது. (தற்போதுள்ள சட்ட விதிகளில் வாகனங்களின் எண்ணிக்கை குறித்துரைக்கப்பட்டு குறிப்பிடப்படவில்லை, ஆனால் ஒரு வாகனப் பேரணி என்பது ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்கள், ஒன்றன் பின் ஒன்றாக, கட்சி/வேட்பாளர்/அரசியல் ஊக்குவிப்புக்காக செல்லும் போது அது பொதுமக்களுக்கு இடையூறாக அமையலாம்.


සභාපති
தவிசாளர்
දුරකථන/தொலைபேசி: 011-2868444
ෆැක්ස්/தொலைநகல் :011-2868445

මැතිවරණ කොමසාරිස් ජනරාල්
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
දුරකථන/தொலைபேசி:011-2885207
ෆැක්ස්/தொலைநகல் :011-2885208

අතිරේක මැතිවරණ කොමසාරිස්
(නීති, විමර්ශන හා සැලසුම්)
மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர்
(சட்டம் , விசாரணைகள் மற்றும் திட்டமிடல்)

**அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களில் பிரச்சார நடவடிக்கைகள்**

1. அறிவிக்கப்பட்ட தேர்தல் அலுவலக வளாகத்திற்குள் மாத்திரம் அலுவலகத்தின் பெயரைக் குறிக்கும் பெயர்ப் பலகை, கட்சி/சுயேச்சைக் குழுவின் சின்னத்தைக் காட்டும் பலகை மற்றும் வேட்பாளர்களின் புகைப்படங்கள் அடங்கிய பலகைகளை காட்சிப்படுத்த அனுமதிக்கப்படும். அவை 60 சதுர அடியை விஞ்ஞாமல் இருத்தல் வேண்டும். மேலும் அலுவலகங்களுக்குள் 06 கொடிகளை காட்சிப்படுத்த சந்தர்ப்பம் உண்டு. அது தவிர, வேறு எந்த விதமான அலங்காரங்களும் அனுமதிக்கப்படமாட்டாது. நெடுஞ்சாலைகள், நடைபாதைகள், மின்கம்பங்கள், எல்லைச் சுவர்கள் போன்றவற்றில் எந்தவிதமான விளம்பரங்கள், கட்அவுட்கள், கொடிகள், போன்றவற்றைக் காட்சிப்படுத்தல் கூடாது. மேற்குறிப்பிட்ட இணக்கத்தின் மீது அளிக்கப்பட்ட அனுமதியை தவறாகப் பயன்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு செல்லுபடியாகும் சட்டத்தின் கீழ் விளம்பரங்கள், விளம்பரப் பலகைகளை, எந்த இடத்திலும் காட்சிப்படுத்தல் கூடாது என்ற விதி அமுல்படுத்தப்படும்.
2. அந்தந்த கட்சி/குழுவின் வேட்பாளராக இல்லாத வேறு அரசியல்வாதிகள் அல்லது வேட்பாளரின் புகைப்படங்கள், வாக்குச் சின்னங்கள், உள்ளார்ந்த சொற்றொடர்கள் போன்றவற்றை அலுவலகத்தில் காட்சிப்படுத்த முடியாது.
3. எந்தவொரு தேர்தல் அலுவலகத்திலும் தேசியக் கொடி, சமயக் கொடிகள், சமய சின்னங்களை காட்சிப்படுத்தக்கூடாது.
4. மேலும், ஒவ்வொரு அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்படும் கட்சி/வேட்பாளர் விளம்பரப் பலகைகள், கொடிகள், பதாகைகள், புகைப்படங்கள் போன்றவற்றை 2024.11.11 நள்ளிரவு முதல் அகற்றுதல் வேண்டும். ஆயினும், தொகுதிகளுக்கான மத்திய அலுவலகம் மற்றும் அறிவிக்கப்பட்ட கிளை தேர்தல் அலுவலகங்கள் அந்த அலுவலகத்தை அறிமுகப்படுத்துவதற்கான பெயர் பலகையை மாத்திரம் காட்சிப்படுத்த முடியும். வாக்களிப்பு நிலையத்தில் இருந்து 500 மீட்டர் தொலைவில் அந்த அலுவலகங்கள் அமைந்திருப்பின் அவற்றை அகற்றுதல் வேண்டும்.
5. வேட்பாளர் வசிக்கும் வீட்டினை அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகமாக பயன்படுத்தும் போது அந்த அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலத்தை இங்கு குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்ட வகையில் அலங்கரிக்க முடியும்.
6. அவ்வாறே அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகமாக பயன்படுத்துவதற்கு அனுமதிபெறப்பட்ட தற்காலிக கூடாரங்களை அவ்வாறு அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகமாக நடாத்தி வருவதற்கு அனுமதிபெற்ற அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழுவினால் 24 மணி நேரமும் அந்த தற்காலிக கூடாரங்களுக்கு பாதுகாப்பினை வழங்கி அந்த வேட்பாளரின் தேர்தல் அலுவலகமாக பேணிவரல் வேண்டும்.
7. எந்தவொரு அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகத்திலும் நாட்டின் பொதுச் சட்டங்கள் மற்றும் தேர்தல் சட்டங்கள் மீறப்படக்கூடாது என்பதையும் வழியுறுத்துகின்றேன்.

இலக்கம் 2034/37 எனும் 2017.09.01 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அரசியல், சமூக, சமய, தேசிய, கலாசார அல்லது வேறு ஏதேனும் உற்சவங்கள் அல்லது வைபவங்களுக்கு அனைத்து விதமான பொலித்தீன் வகைகளை அலங்காரங்களுக்காக பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கமைய மேற்குறிப்பிட்டவாறு சட்டரீதியாக தயாரிக்கப்படும் துண்டுபிரசுரங்கள், அறிவித்தல்கள், சித்திரங்கள், புகைப்படங்கள், கொடிகள், பதாகைகள், பிரச்சாரப் பலகைகள் மற்றும் முகப்புக் கோபுரங்கள் போன்றவற்றை பொலித்தீனைப் பயன்படுத்தாது தயாரிக்குமாறு அறியத்தருகின்றேன். மேலும் கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் மற்றும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களில் செய்யப்படும் அலங்காரங்களின் போதும் அனைத்து விதமான சட்டபூர்வமான பிரச்சார நடவடிக்கைகளின் போதும் பொலித்தீனைப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**

பிரதிகள் :-

1. செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ,
2. பொலிஸ்மா அதிபர் (ப.க)
3. அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள்
4. அனைத்து சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள்
5. அனைத்து மாவட்ட பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள்
6. மாவட்ட தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் அலுவலகங்களினதும் அனைத்து உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்

} நியதிகளுக்கமைய பிரச்சார பலகைகளை அகற்றுதல் மற்றும் ஏனைய பிரச்சார நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதற்கு